கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம்

நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2011/2012 (December 2017)

**GYS 4213 மனிதவள அபிவிருத்தி (Human Resource Development)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும். கணிப்பான் பாவிக்க அனுமதி வழங்கப்படும்.

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

1. அ) மனிதவள அபிவிருத்தி என்றால் என்ன? (05 புள்ளிகள்)

ஆ) மனிதவள அபிவிருத்தியானது ஆரம்ப காலத்திலிருந்து எவ்வாறு விருத்தி பெற்று வந்துள்ளது என்பதனை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

இ) மனித வளத்தின் தரத்தினை தீர்மானிக்கின்ற காரணிகளுள் முக்கிமான மூன்று காரணிகளின் செல்வாக்கு தொடர்பாக கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

2. அ) வாழ்க்கைத்தரத்தை அள்விட பயன்படுத்தப்படும் முக்கியமான இரு குறிகாட்டிகள் தொடர்பாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

ஆ) அட்டவணை 1 ல் தரப்படும் தரவுகளைப் பயன்படுத்தி இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் மனித அபிவிருத்தி சுட்டெண்ணைக் (HDI) கணிக்குக. (06 புள்ளிகள்)

அட்டவணை 1 மனித அபிவிருத்திக் குறிகாட்டிகள் (2014)

| குறிகாட்டிகள் (Indicators) | கூடியது (Maximum) | குறைந்தது (Minimum) | இலங்கை | பாகிஸ்தான் |
|---|---|---|---|---|
| ஆயுள் எதிர்பார்ப்பு (Life Expectancy) | 85 | 20 | 74.9 | 66.4 |
| பாடசாலைக்கு செல்லும் எதிர்பார்க்கை வயது (EYS) | 18 | 0 | 14 | 8.1 |
| பாடசாலைக்கு செல்லும் சராசரி வயது (MYS) | 15 | 0 | 10.9 | 5.1 |
| தலா தேசிய வருமானம் (GNI per Capita) PPPUS$ | 75000 | 100 | 10396 | 5031 |

மூலம்: மனித வள அபிவிருத்தி அறிக்கை, 2015

இ) இலங்கையின் மனித வள அபிவிருத்தியானது அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிலையை அண்மித்ததாக வளர்ச்சி கண்டு வருகின்றது" இக் கூற்றினை ஏற்றுக் கொள்கின்றீரா? ஆதாரங்களுடன் விளக்குக. (13 புள்ளிகள்)

3. இலங்கை கடைப்பிடித்த உணவு விநியோக முறைகளும், கல்வி மற்றும் சுகாத கொள்கைகளும் நாட்டின் மனிதவள மேம்பாட்டில் செலுத்திய செல்வாக்கினை ஆராய்

(25 புள்ளிகள்)

4. "இன்றைய அறிவுசார் பொருளாதார கட்டமைப்பில் நாடுகளின் அபிவிருத்தி அந்நாடுகள் மனிதவள மேம்பாட்டு நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளன" ஆராய்க.

(25 புள்ளிகள்)

5. தொழில் நிறுவனங்கள் வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் இயங்குவதற் சந்தையில் போட்டிகளை எதிர்கொண்டு நிற்பதற்கும் மனிதவள மேம்பா நடவடிக்கைகளே முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆராய்க.

(25 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் இரண்டினிற்கு விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ) மனிதவள அபிவிருத்தியும் தொழிற்கல்வியும் களப்பயிற்சியும்

ஆ) நிறுவனங்களும் - ஊழியப்படை திரட்டலும்

இ) தொழிற்படையில் மாறிவரும் பெண்களின் பங்களிப்பு

ஈ) மனிதவள மேம்பாட்டில் சிறுவர் உழைப்பைக் கட்டுப்படுத்துதல், சிறுவர் பாதுகாப்பின் முக்கியத்துவங்கள்

($12\frac{1}{2}$ x 2 = 25 புள்ளிகள்